# கற்றல் குறைபாடு விழிப்புணர்வு தூதராக கிரிக்கெட் வீரர் அஸ்வின் நியமனம்

சென்னை, அக். 13—

கற்றல் குறைபாடு எனப்படும் 'டிஸ்லெக்சியா' குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான தூதராக, இந்திய கிரிக்கெட் வீரர் அஸ்வின் நியமனம் செய்யப் பட்டுள்ளார்.

'மெட்ராஸ் டிஸ்லெக்சியா' சங்கம் சார்பில், கற்றல் குறைபாட்டால், பள்ளி மாணவர்களிடையே ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அவற்றை சரி செய்வது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான தூதராக, தமிழகத்தை சேர்ந்த இந்திய கிரிக்கெட் வீரர் அஸ்வின் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து, 'மெட்ராஸ் டிஸ்லெக்சியா' சங்க சிறப்பு பயிற்சியாளர் ஹரிணி மோகன் கூறியதாவது:

'டிஸ்லெக்சியா' என்பது கண்களுக்கு புலப்படாத கற்றல் திறன் குறைபாடு. சராசரியாக 10 சதவீதம் மாணவ, மாணவியரிடம் இந்த பாதிப்பு இருக் கலாம். இந்த குறையுள்ள குழந்தைகளால், படிக்க முடியாது, ஆனால், அவர்களிடம் ஓவியம் வரைவது, விளையாட்டு என, பல திறமைகள் உள்ளன. அவற்றை கண்டறிந்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கிரிக்கெட் வீரர் அஸ்வின் கூறியதாவது:

'டிஸ்லெக்சியா'வால் பாதிக்கப்பட்ட குழந்தை களுடன் பேசிப் பழகும்போது, எனது பள்ளிப் பருவத்தில் எனது நண்பர்கள் சிலரும் இதுபோன்று இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

இந்த குறைபாட்டை கண்டறிவதற்கு போதிய விழிப்புணர்வு பெற்றோர் மற்றும் ஆசிரியர்களிடம் ஏற்பட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.